தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

15.02.2013 A.M

## அரபிக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகத்தில் இன்றும் மழை வாய்ப்பு

அரபிக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: லட்சத்தீவுகள் மற்றும் கேரள, கர்நாடக கடற்கரை ஒட்டிய அரபிக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.இந்த மழை மேலும் ஓரிரு நாள்கள் நீடிக்கும்.

வானிலை முன்னறிவிப்பு: ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே கனமழை பெய்யும். தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தின் சில மாவட்டங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. மற்ற பகுதிகள் மற்றும் புதுவையில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் பெய்த மழை அளவு (வியாழக்கிழமை காலை நிலவரம் - மி.மீ.): திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம், மதுரை மாவட்டம் பேரையூர் - 60, அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, பூதபாண்டி, விருதுநகர், திருச்செந்தூர் - 50, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தான்குளம் - 40, தூத்துக்குடி, விளாத்திகுளம், சிவகிரி, நான்குநேரி, மணிமுத்தாறு, குளச்சல், நாகர்கோயில், சிவகாசி, அருப்புக்கோட்டை, தொண்டி - 30, பரமக்குடி, ராமேஸ்வரம், ராமநாதபுரம், ஸ்ரீவைகுண்டம், பேச்சிப்பாறை, தென்காசி - 20.

## திண்டுக்கல்லில் மழை

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்த நிலையில், வியாழக்கிழமை பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது.

புதன்கிழமை பிற்பகல் முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மேலும், சின்னாளப்பட்டி, திண்டுக்கல் உள்ளிட்ட ஒரு சில இடங்களில் லேசான மழைத் தூறல் இருந்தது.

இதனைத் தொடர்ந்து, வியாழக்கிழமையும் அதிகாலை முதலே இதமான சீதோஷ்ண நிலை காணப்பட்டது. பின்னர், காலை 10 மணிக்கு மேல் பல்வேறு இடங்களில் சுமார் அரை மணி நேரம் மழை பெய்தது.

இதனால், கடந்த சில நாள்களாக நிலவி வந்த வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலவியது. இந்த மழையினால், நகரின் தாழ்வானப் பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

இதேபோல், வேடசந்தூர் பகுதியிலும் லேசாக சாரல் மழை பெய்தது. கோடை காலம் தொடங்கும் நிலையில், திடீரென பெய்த இந்த மழை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

## விருதுநகர் மாவட்டத்தில் மழை

விருதுநகர் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக கடும் வெயில் அடித்தது. இதனால், விவசாயப் பயிர்கள் சாகுபடி செய்ய முடியாமல் கருகின. இந்நிலையில், புதன்கிழமை பிற்பகலில் கருமேகங்கள் சூழ்ந்து, மாலை 6 மணிக்கு மழை பெய்யத் தொடங்கியது. அதன் பின்னரும் தூறல் இருந்தது. அதேபோல், வியாழக்கிழமை அதிகாலையிலேயே மழை பெய்ய தொடங்கியது. இதனால், சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

மழை அளவு: வியாழக்கிழமை காலை 9 மணி  வரை பதிவான மழை அளவு:

விருதுநகர் மாவட்டத்திலேயே அதிகபட்சமாக சாத்தூர்-42 மி.மீ., விருதுநகர்-41 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூர்-40 மி.மீ., சிவகாசி-33.4 மி.மீ., வெம்பகோட்டை-29. 6 மி.மீ., அருப்புக்கோட்டை-25 மி.மீ., காரியாபட்டி-22 மி.மீ., கோவிலாறு-11.6 மி.மீ., பிளவக்கல்-10 மி.மீ., வத்திராயிருப்பு-6.4 மி.மீ., திருச்சுழி-5 மி.மீ., ராஜபாளையம்-4.2 மி.மீ., என்கிற அளவில் மழையளவு பதிவாகியுள்ளது.

## மண்புழு உரமே விவசாயிகளின் இன்றைய தேவை

சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்கவும், பயிர்களின் சிறந்த வளர்ச்சிக்கும், மண்புழு உரமே விவசாயிகள் இன்றைய தேவை என வனக்கல்லூரி முதல்வர் துரைராசு பேசினார்.

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வனச்சூழல், சூழலியல் துறை மற்றும் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் சார்பில் மண்புழு உர உற்பத்தி குறித்த தொழில்நுட்ப பயிற்சி கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கூடுதல் தலைமை வனப்பாதுகாவலர் அர்ஷத் சட்ஜத் ஜாப்ரி தலைமை வகித்தார். கல்லூரிப் பேராசிரியர் கோட்டீஸ்வரன் வரவேற்றார்.

இதில், கல்லூரி முதல்வர் துரைராசு பேசியது: மக்கள்தொகை பெருக்கத்துக்கேற்ப உணவு உற்பத்தியும் அதிகரித்துள்ளது. பெரும்பான்மையான விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. பசுந்தாழ் உரத்துக்கு தேவையான மரமோ, செடியோ, கொடியோ இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாற்றாக மண்புழு உரத்தின் தேவை அவசியமாகி வருகிறது. நிலமும், மண்ணும் மாசுபடாமல் இருக்க மண்புழு உரம் உதவுகிறது. திடக்கழிவு மேலாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் மண்புழுவின் தேவை அதிகரித்து வருகிறது.

வேளாண் உற்பத்தியை 3 மடங்காக பெருக்க நினைக்கும் அரசின் முயற்சிக்கு மண்புழு உரத்தின் பயன்பாடு அவசியம். இதை நன்செய் மற்றும் புன்செய் நிலங்களிலும் பயன்படுத்தலாம். இந்த உரத்தைச் சேர்த்து செடிகளை நடவு செய்தால், விரைவான வளர்ச்சி காண முடியும். சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்க, மண்புழு உரத்தை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்றார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் கலைச்செல்வி மண்புழு உரம் தயாரிப்பு குறித்தும், அன்னூர் வட்ட முன்னோடி விவசாயி காளியப்பன் மண்புழு உர உற்பத்தி குறித்தும், இணைப் பேராசிரியர் பாலசுப்பிரமணியன் பயன்தரும் மர வகைகள் குறித்தும், ஸ்டேட் வங்கி மேலாளர் ரமேஷ் வேளாண் கடன்கள் குறித்தும் பேசினர்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் திலக், மண்புழு உர உற்பத்தி மற்றும் மண்புழு குளியல் நீர் குறித்து செயல்முறை விளக்கமளித்தார். மேட்டுப்பாளையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 150-க்கும் மேற்பட்ட விவசாயிகளும், உழவர் விவாதக் குழு மைய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம் விவசாயிகளுக்கு கூடுதல் இழப்பீடு பெற்றுத்தரப்படும்: ஆட்சியர்

எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்துக்கு நிலம் வழங்கும் விவசாயிகளுக்கு கூடுதலாக இழப்பீடு பெற்றுத் தரப்படும் என திருப்பூர் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் கூறினார்.

கேரள மாநிலம் கொச்சியில் இருந்து பெங்களூர் வரை 310 கி.மீ-க்கள் தூரம் குழாய் மூலம் எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தை மத்திய அரசின் கெயில் நிறுவனம் (கேஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா நிறுவனம்) மேற்கொண்டுள்ளது.

இதில், கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 7 மாவட்டங்களில் 136 கிராமங்கள் வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் பணி துவங்கப்பட்டது.

இந் நிலையில், திருப்பூர் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட முல்லைநாயக்கனூர், பாப்பம்பாளையம், பல்லவராயன்பாளையம் கிராம விவசாயிகள், விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ரவிச்சந்திரன் தலைமையில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆட்சியர் கு.கோவிந்தராஜை சந்தித்து பேசினர். இதில், இழப்பீட்டுத் தொகையை கூடுதலாக வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்களிடம் ஆட்சியர் கோவிந்தராஜ் கூறியது: இந்தத் திட்டத்துக்காக விளைநிலங்கள் நில எடுப்பு மூலமாக கையகப்படுத்தப்படவில்லை. குழாய் பதிப்பதற்காக நிலத்தை உபயோகப்படுத்துவதற்கான உரிமை மட்டும் விவசாயிகளிடம் இருந்து பெறப்படுகிறது.

கிராமக் கணக்குகளில் இந்த விவசாய நிலங்கள் குறித்து எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்பட மாட்டாது. அந்தந்த பட்டாதாரர் பெயரில் நிலம் இருக்கும்.

எரிவாயு குழாய் அமைக்கும் பாதையில் இருக்கும் தென்னை, மா உள்ளிட்ட மரங்கள் மற்றும் பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாகும்பட்சத்தில், அதற்கு தனியாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

இழப்பீட்டுத் தொகை குறைவு என விவசாயிகள் கருதினால், பாதிக்கப்பட்ட நிலத்தின் புல எண், பாதிப்புக்கு உள்ளான பயிர், மரங்களின் மதிப்புத் தொகையை குறிப்பிட்டு, ஆட்சியருக்கு தனியாக விண்ணப்பிக்கலாம்.

அதன்பேரில், உரிய நடவடிக்கை மேற்கொண்டு கூடுதலாக இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தர மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது. எனவே, இத் திட்டத்துக்கு விவசாயிகள், அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

## கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் எருமைகளை வாங்க வியாபாரிகள் போட்டி

கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் எருமைகளை வாங்க ஆந்திர வியாபாரிகள் இடையே கடும் போட்டி நிலவியது.

ஈரோடு, கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் மாட்டுச் சந்தையில் தங்களது மாடுகள், எருமைகளை விற்பனை செய்ய ஈரோடு, நாமக்கல், சேலம், கரூர், திருப்பூர், கோவை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் வருகின்றனர்.

இம்மாடுகளை வாங்குவதற்கு தமிழகம், கர்நாடகம், ஆந்திரம், கேரள மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் வாரந்தோறும் வருகின்றனர். கடந்த சில வாரங்களாக சந்தைக்கு வரும் மாடுகள், எருமைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வறட்சி காரணமாக தீவனம் கிடைக்காததால் விவசாயிகள் தங்களது மாடுகளை விற்பனை செய்ய ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த 2 வாரங்களாக இச்சந்தைக்கு ஆந்திர வியாபாரிகள் வருகை அதிகமாக உள்ளது. இச்சந்தைக்கு வரும் எருமைகளை ஆந்திர வியாபாரிகள் போட்டியிட்டு வாங்குவதால் எருமைகள் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த வாரம் சந்தைக்கு சுமார் 450 மாடுகள், 350 எருமைகள் வந்தன; மாடுகள் ரூ. 16,000 முதல் ரூ. 33,000 வரையும், எருமைகள் ரூ. 18,000 முதல் ரூ. 35,000 வரையும் விலைபோயின.

எருமை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆந்திரப்பிரதேச மாநில அரசு கடனுதவி வழங்குவதால், எருமைகளை வாங்க ஆந்திர வியாபாரிகள் ஆர்வம் காட்டுவதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

## அரிசி ஆலைகளில் குறைந்த விலையில் அரிசி விநியோகம்! ஆலை உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

அரிசி ஆலைகளில் குறைந்த விலையில் அரிசி விநியோகம் செய்யப்படும் என்று, ஈரோடு மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல், அரிசி மொத்த வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் கே.ஆறுமுகம், செயலாளர் எம்.எம்.கந்தசாமி ஆகியோர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பருவமழை பொய்த்துவிட்டதால் தமிழகம் முழுவதும் வறட்சி நிலவுகிறது. இதை உணர்ந்த தமிழக அரசு சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளது. நெல் விளைச்சல் குறைந்துள்ளதால் அரிசிக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

டீசல் விலை உயர்வால் லாரி வாடகை இரு மடங்கு அதிகரித்துள்ளது. ஆள் கூலியும் அதிகரித்துள்ளது. இவற்றால் உற்பத்திச் செலவு இரு மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் அரிசி விலையும் சிறிது உயர்ந்துள்ளது.

ஆனால், அரிசி விலை அபரிதமாக உயர்ந்துவிட்டதாக தொடர்ந்து தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்தவும், மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைக்கவும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரிசி ஆலைகளிலும் நேரடியாக அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சாதாரண ரகத்தில் ஒரு கிலோ ஏ.டி.டி.-38 புழுங்கல் அரிசி ரூ. 26 முதல் ரூ. 27 வரையும், ஐ.ஆர்-20 புழுங்கல் அரிசி ரூ. 27 முதல் ரூ. 28 வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

சன்ன ரகத்தில் அதிசய பொன்னி புழுங்கல் ரூ. 32 முதல் ரூ. 34 வரையும், சோனாமசூரி ரூ. 35 முதல் ரூ. 37 வரையும், பி.பி.டி. பொன்னி புதியது ரூ. 40 முதல் ரூ. 41 வரையும், பி.பி.டி. பொன்னி பழையது ரூ. 43 முதல் ரூ. 45 வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

மிக சன்ன ரகத்தில் கர்நாடகப் பொன்னி புதியது ரூ. 42 முதல் ரூ. 43 வரையும், கர்நாடகப் பொன்னி பழையது ரூ. 47 முதல் ரூ. 48 வரையும், இட்லி அரிசி புதியது ரூ. 29 முதல் ரூ. 30 வரையும் விற்பனை செய்யப்படுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 33.25 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 26 கனஅடி நீரும், வாய்க்காலில் 1,300 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 1.57 டி.எம்.சி.

## பயிர்க் கடன்களை ரத்து செய்ய கோரிக்கை

நீலகிரி மாவட்ட விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன்களை வறட்சி காரணமாக ரத்து செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீலகிரி உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்கம் நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசு சென்னையைத் தவிர பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளது. மாவட்டங்களில் நிலவிய வறட்சியை ஆய்வு செய்து நிவாரணம் அறிவித்துள்ள தமிழக முதல்வருக்கு நீலகிரி மாவட்ட விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றனர்.

டெல்டா பகுதி விவசாயிகளுக்கு அரசே பயிர்க் காப்பீட்டுத் தொகை செலுத்தி நிவாரணம் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயக் கடன் பெறும்போது விவசாயிகளே பயிர்க் காப்பீட்டு தொகை செலுத்தியுள்ளனர்.

எனவே, தற்போதைய வறட்சி காரணமாக விவசாயிகள் செலுத்திய பயிர்க் காப்பீட்டைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் பெற்ற கடனை காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்றுத் தருவதோடு, அனைத்து விவசாயிகளின் பயிர்க் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 பருவங்களில் சாகுபடி செய்த பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்புக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, விவசாயிகளின் இழப்புக்குத் தகுந்த நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பொருளாதார இழப்பைக் கருத்தில் கொண்டும், இம்மாவட்டத்தை சிறப்பம்சமாகக் கருதியும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகையை நீலகிரி மாவட்டத்திற்கு விரைவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனுவின் நகல்கள் தமிழக முதல்வரின் தனிப்பிரிவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்குதொழில்நுட்ப பயிற்சி வகுப்பு

மேற்கு ஆரணி ஒன்றியம் தெள்ளூர் கிராமத்தில், விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

இங்கு அட்மா திட்டத்தின் கீழ் 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு பண்ணைப் பள்ளி வகுப்பு நடத்தப்பட்டது. இதில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.செந்தில்குமார் கலந்துகொண்டு திருந்திய நெல் சாகுபடியின் 6 முக்கிய தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஏ.சுமித்ரா விவசாயிகளிடம் உயிர் உரம் கொண்டு செயல் விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் எஸ்.நாகராஜ், பி.முத்து ஆகியோர் மேட்டுப்பாத்தி தயாரித்தல் மற்றும் நாற்று விடும் முறை குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

## டெல்டா விவசாயிகளுக்கான சலுகைகள்: திரிசங்கு நிலையில் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள்..

டெல்டா பகுதி விவசாயிகளுக்கு தமிழகமுதல்வர் அறிவித்துள்ள சலுகைகள் அனைத்தும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள டெல்டா பாசன விவசாயிகளுக்கு கிடைக்குமா என்பதில் குழப்பம் நீடித்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்த நெல் விவசாயப்பரப்பு சுமார் 1.06 லட்சம் ஹெக்டேர் என கண்டறியப்பட்டுள்ளது. அதில் 11,200 ஹெக்டேர் மட்டுமே காவிரி பாசனப்பகுதியாக இருந்து வருகிறது, மீதமுள்ள 90 சத விவசாய நிலங்கள் நீர் ஆதாரத்துக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் மழை மற்றும் மானாவாரிக் குளங்கள், நிலத்தடி நீரை மட்டுமே நம்பி இருக்கின்றன.

இந்நிலையில், பருவ மழையை நம்பி நிகழாண்டில் சுமார் 75 ஆயிரம் எக்டேரில் மேற்கொள்ளப்பட்ட நெல் பயிர்கள் வறட்சியால் 90 சதவிகிதம் கருகிவிட்டன. காவிரி பாசனம் பெறும் பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பல வகையான வேளாண் கடன்களைப் பெற்று விவசாயம் செய்த விவசாயிகளின் எதிர்காலம் கேளவிக்குறியாகி விட்டது.

இச்சூழ்நிலையில், தமிழக முதல்வர் சென்னை தவிர்த்த 31 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து, நிலவரி ரத்து, நிவாரண உதவிகள் போன்றவைகளை அறி6வித்துள்ளார்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் சேதக் கணக்கெடுப்பு பணிகளை தாமதமின்றி தொடங்கினால் மட்டுமே மாவட்டத்தில் மானாவாரி பகுதி விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும்.

காவிரி பாசன பெறும் கறம்பக்குடி ஒன்றியம், ஆலங்குடி, அறந்தாங்கி தொகுதிகளில் உள்ள நெடுவாசல், செரியலூர், மேற்பனைக்காடு நெய்வத்தளி, கோவிலூர், ஆயிங்குடி, அரசர்குளம், நாகுடி, சுப்பிரமணியபுரம் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்த விவசாயிகளும் நிவாரண உதவிக்காகக் காத்திருக்கின்றனர். இவர்களுக்கு டெல்டா மாவட்டத்துக்கான அரசின் சலுகைகள் கிடைக்கவில்லை. இதற்கு உரிய தீர்வு காண வேண்டுமென கடந்த மாதம் நடந்த விவசாயிகள் குறை கேட்புக்கூட்டத்திலிருந்து விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர்.

இந்நிலையில் தமிழக முதல்வர் அறிவித்துள்ள நிவாரண உதவிகள் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மாவட்ட விவசாயிகளிடம் அதிகரித்துள்ளது.

இது குறித்து, இந்திய விவசாயிகள் சங்க மாவட்டத்தலைவர் ஜி.எஸ். தனபதி கூறியது:

விவசாய நிலப்பரப்பு நன்செய், புன்செய் என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் டெல்டா மாவட்டங்களில் 7.5 லட்சம் எக்டேர் நன்செய் நிலம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சுமார் 2.5 லட்சம் ஏக்கர் நன்செய் நிலப்பரப்புக்கு

உள்பட்ட காவிரி பாசனம் பெறும் பகுதிகளும் அடங்கியுள்ளதா என்ற விவரம் இதுவரை தெரியவில்லை என்றார்.

இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மு. மாதவன் கூறியது:

கடந்த ஆண்டில் டெல்டா விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட 12 மணி நேர மின்சாரம், மானிய விலையில் டீசல், பயிர்காப்பீடுக்கான பிரிமியத் தொகையை அரசே செலுத்துவது போன்ற சலுகைகள் புதுக்கோட்டை மாவட்ட காவிரி பாசனப்பகுதி விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. இது குறித்த உண்மையான நிலவரத்தை மாவட்ட நிர்வாகம் விவசாயிகளுக்கு தெரிவித்தால் நல்லது என்றார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 29.51 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 29.51 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 81 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## பெரம்பலூர், அரியலூர் பகுதிகளில் பரவலாக மழை

பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் வியாழக்கிழமை மதியம் பரவலாக மழை பெய்தது.

கோடை தொடங்குவதற்கு முன்னதாகவே கடந்த சில நாள்களாக கடுமையான வெயிலின் தாக்கம் காணப்பட்டதால், பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

இந்நிலையில் பெரம்பலூரில் வியாழக்கிழமை காலையிலிருந்தே வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

இதனிடையே மதியம் 1 மணியளவில் பலத்த மழை பெய்தது. இதனால் சாலையோரங்களில் மழை நீர் பெருக்கெடுத்தோடியது.

இதேபோல, அரியலூரிலும் பரவலான மழை பெய்தது. தொடர்ந்து இரவு முழுவதும் குளிர் காற்று வீசியதால் நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## "கோழிப்பண்ணைத் தொழிலில் முன்னோடியாக வேண்டும்'

கோழிப்பண்ணைத் தொழிலில் தமிழ்நாட்டிலேயே பெரம்பலூரை முன்னோடி மாவட்டமாக ஆக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் நான்குசாலை பகுதியில் உள்ள இப்பா பயிற்சி மையத்தில் புதிதாக

கோழிப்பண்ணை அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, திருச்சியில் இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் 5 நாள் பயிற்சி முகாம் புதன்கிழமை தொடங்கியது.

முகாமை தொடக்கி வைத்த ஆட்சியர் மேலும் பேசியது:

கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகளை அமைக்க 138 பேருக்கு மானியமாக ரூ. 2 கோடியே 85 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு மானியமாக தமிழக அரசு ரூ. 2 லட்சத்து 6 ஆயிரமும், மத்திய அரசின் கோழி வளர்ச்சி நிதி ஆதாரத் தொகையிலிருந்து ரூ. 2 லட்சத்து 6 ஆயிரமும் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் கோழிப்பண்ணை அமைக்க இதுவரை பெறப்பட்ட 630 விண்ணப்பங்களில் 315 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களின் பட்டியல் அந்தந்தப் பகுதி வங்கி மேலாளர்களுக்கு அனுப்பப்பட்டு, திறனுடைய நபர்களுக்கு முன் அனுமதி ஆணை பெறப்பட்டு, தகுதியுள்ளோர் கோழிப் பண்ணைகளை அமைத்து வருகின்றனர்.

திட்டத்தில் தேர்வானோர் புதியவர்கள் என்பதால், தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழகப் பயிற்சி, ஆராய்ச்சி மையம் சார்பில் 5 நாள் பயிற்சி அளிக்க நிதி ஒதுக்கப்பட்டு, பிப். 16 வரை பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பல்கலைக் கழகப் பயிற்சி மைய உதவிப் பேராசிரியர்கள் மற்றும் சிறப்பு அறிஞர்கள் கோழிப்பண்ணை அமைத்தல், தீவனம் வழங்குதல், நோய் அறிகுறிகள், தடுக்கும் முறைகள் ஆகிய அடிப்படை பயிற்சிகளை அளிக்க உள்ளனர்.

கோழிப்பண்ணைத் தொழிலுக்கு தேவையான மக்காச்சோளம் உள்ளிட்ட தீவனங்கள் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பெரம்பலூரிலிருந்து அனுப்பப்படுகின்றன.

எனவே கோழிப்பண்ணைத் தொழிலில் முன்னோடி மாவட்டமாக பெரம்பலூர் மாவட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றார் அவர்.

பயிற்சி முகாமில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (பொ) க. தங்கராசு, தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியை டி. லூர்துரீட்டா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தஞ்சை மண்டல அலுவலக முதன்மை மேலாளர் ராஜா ருங்மாங்கதன், கால்நடை மருத்துவர்கள் திருநாவுக்கரசு, ஜவகர், செந்தில் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கர்நாடகம் திறந்துவிட்ட தண்ணீர் தமிழகம் வந்தது



உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி காவிரியில் கர்நாடக அரசு திறந்துவிட்ட தண்ணீரானது, தமிழக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவுக்கு 5 நாள்களுக்குப் பிறகு வியாழக்கிழமை அதிகாலை வந்து சேர்ந்தது.

மத்திய நிபுணர் குழு பரிந்துரைப்படி தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடகத்துக்கு கடந்த 7-ஆம் தேதி உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம்.

இதன்படி, கடந்த சனிக்கிழமை வினாடிக்கு 1,250 கன அடி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், இந்தத் தண்ணீரானது புதன்கிழமை இரவு வரை தமிழக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவுக்கு வந்து சேரவில்லை.

மழையின்றி காவிரிப் படுகை வறண்டிருந்ததாலும், கர்நாடக எல்லைப் பகுதியில் புதிய குடிநீர்த் திட்டத்துக்கான வெள்ளோட்டத்துக்கு அந்த மாநில அரசு தண்ணீரை உறிஞ்சுவதாலும் தண்ணீர் வருவதில் தாமதம் இருப்பதாக தமிழக விவசாயிகள் புகார் கூறினர். இந்த நிலையில், வியாழக்கிழமை அதிகாலையிலிருந்து காவிரியில் நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியது.

புதன்கிழமை இரவு 700 கன அடியாக இருந்த நீர்வரத்து வியாழக்கிழமை அதிகாலை முதல் மெல்ல, மெல்ல உயர்ந்து காலை 8 மணியளவில் 2,200 கன அடியாக உயர்ந்தது. பின்னர், வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக நிலைபெற்று வியாழக்கிழமை இரவு வரையிலும் இதே அளவில் தண்ணீர் வரத்து காணப்பட்டது.

பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர் ஆணையக் குழுவினர் படகு மூலம் சென்று ஆய்வு செய்ததில் 2 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருப்பது உறுதி செய்யப்பட்டது.

வழக்கமாக 2 நாள்களிலேயே தமிழக எல்லைப் பகுதிக்கு வரும் தண்ணீரானது இப்போது 5 நாள்கள் கடந்த பிறகே வந்துள்ளது. மேலும், இந்தத் தண்ணீரானது ஒகேனக்கல் அருவிகளுக்கு

போதுமான அளவு வரவில்லை. ஒகேனக்கல் அருவியில் சில இடங்களில் மட்டுமே தண்ணீர் அருவிபோலக் கொட்டுகிறது. படகு சவாரி செய்யும் பகுதிகள் அனைத்தும் ஓடை போலவேக் காட்சியளிக்கின்றன.

இதுதொடர்பாக, ஒகேனக்கல்லில் பரிசல் ஓட்டியாக உள்ள பாலாஜி கூறியது:

ஒகேனக்கல் அருவியில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகவே தண்ணீர் இல்லை. இதனால், சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்தும், தண்ணீரின்றியும் களையிழந்து காணப்பட்டிருந்தது. கர்நாடகத்தில் தண்ணீர் திறக்கப்பட்டு 5 நாள்களுக்குப் பிறகு வியாழக்கிழமை அதிகாலைதான் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இருப்பினும், போதிய அளவு தண்ணீர் இல்லாததால் அருவிகளில் பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சியைக் காண முடியவில்லை.

பிராதன அருவி, சினி பால்ஸ் ஆகிய பகுதிகளில் மட்டும் குறிப்பிடும்படி தண்ணீர் அருவியாக விழுகிறது. அருவியின் அழகை பரிசலில் சென்று ரசிக்கும்படியான சூழல் இல்லாததால், பரிசல் ஓட்டிகளும் வருவாயின்றி உள்ளனர். காதலர் தினம் என்பதாலேயே இளைஞர்கள், இளம்பெண்கள் வருகை அதிகரித்துக் காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவே என்றார் அவர்.

பாறையாக காட்சியளிக்கும் ஐந்தருவி!
ஆசியாவின் நயாகரா என்றழைக்கப்படும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில் குறிப்பிடும்படியாக இருப்பது ஐந்தருவியே. பல்வேறு திசைகளில் இருந்து வரும் காவிரி தண்ணீரானது ஐந்தருவி என்னும் இடத்தில் ஆர்ப்பரித்து நயாகரா நீர்வீழ்ச்சி போலவே கொட்டும்.

ஆனால், கடந்த 3 மாதங்களாக தண்ணீர் வரத்து இல்லாததால் இந்தக் காட்சியே இல்லாமல் இருந்தது. கர்நாடக அரசு இப்போது தண்ணீர் திறந்தும் ஐந்தருவிக்கு தண்ணீர் வரவில்லை. இதனால், ஐந்தருவி பகுதி முழுவதும் பாறைகளாகவே காட்சியளிக்கின்றன. வியாழக்கிழமை காலை பிலிகுண்டுலுவுக்கு வந்துள்ள தண்ணீரானது மேட்டூர் அணைக்கு நள்ளிரவோ, வெள்ளிக்கிழமை அதிகாலையோ வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குமரி மாவட்டத்தில் சூறைக்காற்றுடன் மழை: வாழைகள்-விசைப்படகு சேதம்



கன்னியாகுமரி மாவட்டத்தில் வியாழக்கிழமை அதிகாலை பரவலாக மழை பெய்தது. சூறைக்காற்று காரணமாக வாழைகள், படகுகள் சேதமடைந்தன. மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

புதன்கிழமை பிற்பகலுக்குப் பிறகு வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு வரை குளிர்ந்த காற்று வீசியது. நள்ளிரவில் மிதமாகத் தொடங்கிய மழை வியாழக்கிழமை அதிகாலை 3.30 மணிவரை நீடித்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக மயிலாடியில் 54.2 மி.மீ. மழை பதிவானது.

விசைப்படகு சேதம்: தேங்காய்ப்பட்டினம் உள்ளிட்ட கிராமங்களில் மழையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. சின்னத்துறை கடல் பகுதியில் வீசிய சூறைக்காற்றில் விசைப்படகு ஒன்று அங்குள்ள பாறையில் மோதி சேதமடைந்து கரை ஒதுங்கியது.

வாழைகள் சேதம்: மெதுகும்மல் ஊராட்சிக்கு உள்பட்ட வட்டக்காலை பகுதியைச் சேர்ந்த ஜான்சன், அதங்கோடு அருகேயுள்ள சாரப்பழஞ்சி பெருங்குளம் பகுதியில் சூறைக்காற்றால் 200-க்கும் மேற்பட்ட வாழைகள் சேதமடைந்தன.

இதேபோல கப்பியறை பகுதியில் சூறைக்காற்றால் 1,000-க்கும் மேற்பட்ட வாழைகள் சேதமடைந்தன.

கன்னியாகுமரி: கன்னியாகுமரி சுற்று வட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை அதிகாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. அதிகாலை 1 மணி முதல் இடியுடன் கன மழை பெய்தது. கன்னியாகுமரி, மயிலாடி, அஞ்சுகிராமம், அழகப்பபுரம், கொட்டாரம், தென்தாமரைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகாலை 5 மணிவரை மழை நீடித்தது.

## நிவாரணத் தொகையை பயிர்க் கடனில் ஈடு செய்யக் கூடாது: தமிழக அரசு




போதிய நீர் இல்லாததால் பயிர்கள் கருகி பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை அவர்களுடைய பயிர்க் கடனில் ஈடு செய்யாமல் முழுத் தொகையையும் அளிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும், வறட்சி நிவாரணம் தொடர்பாக சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்த அறிவிப்புகளைச் செயல்படுத்தவும், வறட்சி நிவாரண கோரிக்கை மனுவை தயார் செய்யவும் தனி கண்காணிப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

போதிய மழை இல்லாமலும், காவிரியில் இருந்து போதிய நீரை கர்நாடகம் திறந்துவிடாத காரணத்தாலும் டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் கருகியுள்ளன. அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அறிவிப்புகளை முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டார். 50 சதவீதத்துக்கு மேல் கருகியுள்ள பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

முதல்வரின் இந்த அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில் அதற்கென தனி உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள இந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:

விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் என்பதை அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் பெறுவார்கள். அந்தத் தொகை மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், பயிர்க் காப்பீட்டு கணக்கு பராமரிக்கும் வணிக வங்கிகளின் ஒருங்கிணைப்புக் கிளைகளுக்கும் வழங்கப்படும். இந்தத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளின் மூலம் வழங்கப்படும்.

ஈடு செய்யக் கூடாது: நிவாரணத் தொகையை ஏற்கெனவே விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன் நிலுவைத் தொகையில் ஈடு செய்யக் கூடாது.

பயிர் காப்பீட்டு நிவாரணத் தொகையை காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பெறும் பட்சத்தில், அந்தத் தொகையை விவசாயிகள் ஏற்கெனவே அரசிடம் இருந்து முன்பண கணக்கில் ஈடு செய்யப்படும். அதற்கேற்ற வகையில், ஓர் உறுதிப் பத்திரம் விவசாயிகளிடம் இருந்து பெற வேண்டும்.

அதன்படி, ஈடு செய்யப்பட்ட பயிர்க் காப்பீட்டு நிவாரணத் தொகை, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிடம் இருந்தும், வணிக வங்கிகளிடம் இருந்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக மாவட்ட ஆட்சியர்களால் திரும்பப் பெறப்பட்டு அரசுக்கு திரும்ப செலுத்தப்பட வேண்டும்.

தனி அலுவலர் நியமனம்: மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள வறட்சியைக் கருத்தில் கொண்டு உரிய வறட்சி நிவாரண கோரிக்கை மனுவை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்ப தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

எனவே, இந்தப் பணியை மேற்கொள்ளவும், நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தவும் வருவாய் நிர்வாக ஆணையாளரான டி.எஸ்.ஸ்ரீதர், கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்படுகிறார்.

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் நிவாரணப் பணிகள் தொடர்பான திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை அனுப்ப வேண்டும். இதற்கென படிவங்களை வடிவமைத்து அறிக்கைகளை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை தொகுத்து அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தனது உத்தரவில் தலைமைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 31 மாவட்டங்களில் வறட்சி பாதிப்பு: நிதியமைச்சர் தலைமையில் குழு

தமிழகத்தில் 31 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்புகளை ஆய்வு செய்ய நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் மொத்தம் எட்டு பேர் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களும் வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இந்த மாவட்டங்களிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று இழப்பீடுகளை அளிக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து 31 மாவட்டங்களில் வறட்சி பாதிப்புகளை

ஆய்வு செய்ய நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் தனியாக குழு அமைக்கப்படும் என பேரவையில் முதல்வர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், அதற்கான உத்தரவை தமிழக அரசு வியாழக்கிழமை பிறப்பித்தது. அதன்படி, குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் விவரம்:

நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்-குழுவின் தலைவர்; மின்சாரத் துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, வீட்டுவசதித் துறை அமைச்சர் வைத்திலிங்கம், வேளாண்மைத் துறை அமைச்சர் தாமோதரன், வருவாய்த் துறை அமைச்சர் வெங்கடாசலம் மற்றும் தொடர்புடைய மாவட்ட அமைச்சர்கள், அரசு அதிகாரிகள்.

இந்த உயர் நிலைக் குழுவானது காவிரி டெல்டா அல்லாத பிற மாவட்டங்களிலும் கள ஆய்வு செய்து உடனடியாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வருவாய்த் துறை செயலாளர் ராஜீவ் ரஞ்சன் வெளியிட்ட உத்தரவில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

15.02.2013 A.M

## மிளகாய் விவசாயிகளுக்கு தற்போது பெய்த மழையால்... பயன் தொடர் மழை பெய்தால் அழுகும் அபாயம்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை மிளகாய் விவசாயத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தாலும், தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் அழுகிவிடும் அபாயமும்

உள்ளதால் விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.மாவட்டத்தில் பரமக்குடி, திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், ராமநாதபுரம், முதுகுளத்தூர், சாயல்குடி, கமுதி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பர

ப்பளவில் மிளகாய் சாகுபடி நடந்து வருகிறது. பருவமழை பொய்ப்பால், நெற்பயிர்கள் சாவியாகி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மிளகாய் சாகுபடி இப்பகுதி விவசாயிகளுக்கு ஆறுதல் ஏற்படுத்தி வ

ருகிறது. தற்போது, ஒரு சில பகுதிகளில் மிளகாய் விளைச்சல் பருவத்தை எட்டியுள்ளது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்குமா? என்பது தான் ÷

கள்விக்குறியாக உள்ளது. பழங்குளத்தை சேர்ந்த விவசாயி, ஆறுமுகம் கூறியதாவது: எந்தாண்டும் இல்லாத அளவிற்கு நடப்பாண்டு பருவமழை தவறியதால், பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி

சாவியாகி போனது. கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். இந்நிலையில், மிளகாய் சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் அக்கறை காட்டினர். தற்போது, காய் விளைந்து பயன்

தரும் வேளையில் இப்படி திரென மழை பெய்ததால், ஒரு புறமும் மகிழ்ச்சியும், மறுபுறமும் பயமும் தொற்றிக் கொண்டுள்ளது. காரணம், இரண்டு நாள் மழையே போதுமானது. தொடர்ந்து மழை பெய்தால்

செடிகள் அனைத்தும் அழிந்துவிடும். இதனால், மிளகாய் செடிகளில் தண்ணீர் தேங்கிவிடாமல்

இருக்க தண்ணீரை வடித்து வருகிறோம், என்றார்.தோடக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: எதிர்பாராத

இந்த மழை மிளகாய், எள், பருத்தி, உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. தொடர் மழை பெய்தால், இந்த பயிர்களுக்கு சிக்கல் ஏற்படும், என்றார்.

## துவங்கியது மஞ்சள் அறுவடை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், மஞ்சள் அறுவடை துவங்கியுள்ள நிலையில், எதிர்பார்த்த விலை கிடைக்குமா என, விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உட்பட மாவட்டம் முழுவதும், 15 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில், மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில், போதிய பருவ மழையில்லாததால், பல பகுதிகளில் மஞ்சள் பயிருக்கு தேவையான அளவு நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது.

இதனால், பயிரிடப்பட்ட மஞ்சளை காக்க, விவசாயிகள் தண்ணீர் வசதிக்காக தங்களது நிலத்தில் உள்ள விவசாய கிணறுகளை ஆழப்படுத்தியும், புதிய போர்வெல் அமைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இதனால், விவசாயிகள் கூடுதல் நிதி சுமைக்கு தள்ளப்பட்டனர். மாநிலம் முழுவதும் கடந்தாண்டை விட, இந்தாண்டு மஞ்சள் சாகுபடி குறைந்துள்ளதால், மஞ்சள் விலை அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர் பார்த்திருந்தனர். ஆனால், தற்போது சந்தையில் மஞ்சளுக்கு போதிய விலை இல்லாத நிலையில், அறுவடை முடித்து விற்பனைக்கு வரும் போது, எதிர்பார்த்த விலை கிடைக்குமா, என விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

தின்னஹள்ளியை சேர்ந்த விவசாயி நரசிம்மன் கூறியது:

மஞ்சளுக்கு, இரு ஆண்டுகளுக்கு முன் குவிண்டல், 15ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனை ஆனதால், மாநிலம் முழுவதும், விவசாயிகள், அதிகளவில் மஞ்சள் சாகுபடி செய்தனர்.மஞ்சள் வரத்து அதிகரித்ததை தொடர்ந்து, இரு ஆண்டுகளாக மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காத நிலை ஏற்பட்டது. அதனை தொடர்ந்து, தர்மபுரி மாவட்டம் உட்பட, மாநிலம் முழுவதும் மஞ்சள் சாகுபடி குறைந்துள்ளது.

ஆனால், பருவ மழை பொய்த்து போனதால், விவசாயிகள் பயிரை காக்க புதிய போர்வெல், கிணறுகளை ஆழப்படுத்துதல் மற்றும் உரவிலை, பூச்சி கொல்லி விலை உயர்வு போன்றவற்றால்,

மஞ்சள் பயிரை காக்க, அதிக செலவு செய்யும் நிலை ஏற்பட்டது.மாவட்டத்தில், பெரும்பலான பகுதிகளில், தற்போது மஞ்சள் அறுவடை துவங்கியுள்ளது. ஆனால், மஞ்சள் விலை, தற்போது குவிண்டால், 5, 500 ரூபாய் வரை விற்பனை ஆகிறது.இத்தொகை, சாகுபடி செலவை விட குறைவாக உள்ளது. சீஸனில் மேலும் விலை குறையுமோ என்று மஞ்சள் சாகுபடி செய்த விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## வாழைக்கு ஊடுபயிராக செண்டுமல்லி சாகுபடி ஏக்கருக்கு 8 டன் வரை மகசூல் வாய்ப்பு

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் வாழை, மஞ்சள் ஆகிய பயிர்களில் செண்டுமல்லி பூ ஊடுபயிராக பயிரிடப்பட்டுள்ளது.

கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணை பாசன பகுதிகளான பங்களாபுதூர், காசிபாளையம், கொங்கர்பாளையம், வாணிப்புத்தூர், விநோபா நகர், பெரும்பள்ளம் அணை பாசன பகுதிகளான கெம்பநாயக்கன்பாளையம், பெரியகொடிவேரி, டி.ஜி.புதூர் பகுதிகளில் கிணற்று நீர் பாசனத்தில் கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வாழை, மஞ்சளில் ஊடு பயிராக செண்டு மல்லிகைப்பூ பயிரிடப்பட்டது. 90 நாட்கள் பயிராக செண்டு மல்லி, நன்கு விளைச்சலாகி அறுவடைக்கு தயாராக உள்ளன.

விவசாயிகள் கூறியதாவது:

விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது.

பெண்களுக்கு, 150 முதல், 200 ரூபாய் வரை கூலி கொடுத்தால் கூட வேலைக்கு வர தயங்குகின்றனர். பல ஆண்டுகளாக விவசாய கூலி செய்யும் நபர்கள் மட்டுமே விவசாய கூலி பணி செய்து வருகின்றனர்.

இளைய தலைமுறையினர் விவசாய பணிக்கு வரவில்லை. விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறையால், தோட்டக்கலை பயிர்களாக காய்கறி மற்றும் பூ வகைக்கு மாறி உள்ளோம்.வாழை மற்றும் மஞ்சளில் செண்டுமல்லி ஊடுபயிராக செய்யலாம். ஒரு கிலோ பாக்கெட் செண்டுமல்லி விலை, 2,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை பயன்படுத்தலாம். மாதத்தில் இரு முறை மருந்து தெளிக்க வேண்டும்.செண்டுமல்லி மூன்று மாத பயிர். அறுவடைக்கு தயாரான பின், எட்டு வாரங்கள் பூ அறுவடை செய்யலாம். பூவில் கருப்பு புள்ளி விழுந்தால், பூ விலை மிகவும் குறைந்து விடும்.அறுவடை செய்யப்படும் பூக்கள், கம்பெனி மற்றும் பூ மார்க்கெட்டில் விற்பனை செய்கிறோம். மொத்த விலையில் கிலோ, 10 முதல்,

12 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறோம். விசேஷ நாட்களில் பூ விலை சற்று அதிகமாக இருக்கும். ஒரு ஏக்கருக்கு எட்டு டன் பூ வரை கிடைக்கும்.வாழையில் ஊடுபயிராக பயிரிட்டுள்ளதால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். நஷ்ட ஏற்பட வாய்ப்பில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## கெந்தொரை கிராமத்தில் கோதுமை அறுவடை

ஊட்டி: "கோதுமை பயிர் செய்யும் கெந்தொரை கிராம மக்களுக்கு அரசு மானியத்துடன் உதவி செய்தால் இத்தொழிலை மேம்படுத்த முடியும்' என விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஊட்டி அடுத்துள்ள கெந்தொரை கிராமத்தை சுற்றி ஏராளமான கிராமங்கள் உள்ளன. மலை காய்கறி விவசாயம் பிரதான தொழிலாக இருந்தாலும், கிராம மக்களின் தேவைக்கு கோதுமை பயிர் செய்து வருகின்றனர். காலம் காலமாக கோதுமை பயிர் செய்து வந்த பிற கிராம மக்கள் கோதுமை பயிர் செய்வதை விட்டு விட்டனர்.ஆனால், கெந்தொரை கிராம மக்கள் மட்டும் நூற்றாண்டு மேலாக கோதுமை பயிர் செய்து வருகின்றனர். ஆண்டு தோறும் நவம்பர் மாதம் பயிரிட்டால், மூன்று மாத இடைவேளையில் கோதுமை பயிர் அறுவடைக்கு தயாராகிறது. மலை காய்கறி தோட்டத்தில் அறுவடை செய்த பயிரை எடுத்த பின்பு, அதே தோட்டத்தை சுத்தம் செய்து கோதுமை பயிர் செய்கின்றனர்.உரம், பூச்சிகொல்லி மருந்து ஏதும் பயன்படுத்தாமல் இயற்கையாகவே 50 ஹெக்டேர் பரப்பளவில் கோதுமை பயிர் செய்யப்பட்டுள்ளது. அறுவடைக்கு தயாரான கோதுமையை விவசாயிகள் தோட்டத்திலிருந்து எடுக்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளனர். இது குறித்து கெந்தொரை பகுதி விவசாயி முருகன் கூறுகையில், ""கெந்தொரை கிராமத்தில் கோதுமை அறுவடை செய்யும் தொழில் கிராம மக்களின் தேவைக்காக காலம் காலமாக நடந்து வருகிறது. அரசு இத்தொழிலை ஊக்குவிக்க வகையில் மானியத்துடன் பிற உதவிகளை விவசாயிகளுக்கு செய்தால் இத்தொழிலை மேலும் அதிகரிக்கலாம்,'' என்றார்.

## பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை வேண்டும்

மஞ்சூர்:"பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறு,குறு தேயிலை விவசாயிகள், தேயிலை தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 25 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். இங்குள்ள அங்கத்தினர்கள் அனைவரும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையை நம்பியுள்ளனர்.

இந்நிலையில், "பசுந்தேயிலைக்கு குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும்' என தேயிலை விவசாயிகள் சார்பில் மத்திய, மாநில அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை வைத்துள்ளனர். குறைந்தபட்ச விலை நிர்ணயத்திற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் தேயிலை விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர். இதையடுத்து பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை நிர்ணயம் செய்வது தொடர்பாக தேயிலை விவசாயிகளின் கருத்து கேட்பு மற்றும் ஆலோசனை கூட்டம் மஞ்சூரில் நடந்தது.இந்த கூட்டத்தில், தோட்டக்கலைத்துறை மேலாண்மை ஆராய்ச்சி கழக ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மாதுரிமாதாஸ் தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் கலந்துகொண்டு, பசுந்தேயிலைக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கருத்துக்களை கேட்டறிந்தனர்.

விவசாயிகளின் கருத்துக்கள்:

"நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ள நிலையில், பசுந்தேயிலைக்கு கட்டுபடியான, நிலையான விலை கிடைக்காததால் தேயிலை விவசாயத்தை நம்பியுள்ள லட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.பசுந்தேயிலைக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யும் ஆலோசனை குழுவில் சிறு, குறு தேயிலை விவசாயிகளுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் இருப்பது வேதனையளிக்கிறது. மேலும் தேயிலை வாரியம், தேயிலை தொழிற்சாலை நிர்வாகங்கள், தேயிலை வர்த்தகர்கள் உள்ளிட்டோர் இந்த குழுவில் இடம் பெறும் நிலையில், விவசாயிகளுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் இருந்தால் அவர்களின் கருத்துக்களையும், வாழ்வாதாரம் பிரச்னைகளையும், தேயிலை தொழிலில் உள்ள இடர்பாடுகளையும் வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

இதனால், விவசாயிகளின் நலன் கருதி, விலை நிர்ணயக்குழுவில் சிறு, குறு தேயிலை விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பசுந்தேயிலை உற்பத்தி செய்ய பராமரிப்பு, உரம், பூச்சிகொல்லி உள்ளிட்ட செலவுகளை கருத்தில் கொண்டு, பசுந்தேயிலைக்கு

குறைந்தபட்சம் கிலோவுக்கு 40 ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என விவசாயிகள் தெரிவித்தனர்."இந்த கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்யப்படும்' என கூட்டத்துக்கு வந்திருந்த குழுவினர் தெரிவித்தனர்.

## தண்ணீர் திறப்புக்கு விவசாயிகள் நன்றி

குளித்தலை: காவிரியாற்றில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுத்த, குளித்தலை எம்.எல்.ஏ., பாப்பா சுந்தரத்துக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

குளித்தலை மற்றும் சுற்று வட்டார பகுதிகளான லாலாப்பேட்டை, திம்மாச்சிபுரம், கண்டியூர், மைலாடி, கருங்களால் பள்ளி, மருதூர், மேட்டு மருதூர், இனுங்கூர், நச்சலூர், நெய்தலூர், பனையூர் உள்ளிட்ட, 500க்கும் மேற்பட்ட கிராமங்களில், வாழை, கரும்பு உள்ளிட்ட பணப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதையொட்டி, பொதுப்பணி துறை மூலம் கட்டளை மேட்டு வாய்க்காலில், மூன்று நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆனால் மேலும், நான்கு நாட்களுக்கு கூடுதலாக தண்ணீர் திறந்து விடும்படி விவசாயிகள், எம்.எல்.ஏ., பாப்பா சுந்தரத்திடம் கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுப்பணி துறை சார்பில், கூடுதலாக தண்ணீர் திறந்து விட எம்.எல்.ஏ., பாப்பாசுந்தரம் நடவடிக்கை எடுத்தார். இதை அறிந்த விவசாயிகள் எம்.எல்.ஏ.,வுக்கு நன்றி தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் நிவாரணம் வழங்கிட உசிலம்பட்டி எம்.எல்.ஏ., கதிரவன் "வேண்டுகோள்'

விழுப்புரம்:அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாவட்ட முதலாவது மாநாடு விழுப்புரம் ஆர்.ஆர்., மகாலில் நடந்தது.

மாவட்ட பொருப்பாளர் மணி தலைமை தாங்கினார். சேஷாத்திரி வரவேற்றார். புதுவை மாநில செயலாளர் முத்து, பொருளாளர் மாயத்தேவர் முன்னிலை வகித்தனர். தமிழ் மாநில பொதுச்செயலாளரும், உசிலம்பட்டி எம்.எல்.ஏ., கதிரவன் புதிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கி பேசியதாவது :

தமிழகத்தில் பல தொகுதிகளில் உள்ள எம்.எல்.ஏ.,- எம்.பி.,க்கள் மக்களின் பிரச்னைகளை கூட கேட்க நேரமில்லாமல் உள்ளனர். ஆனால் பார்வர்ட் பிளாக் கட்சி எந்த நேரத்திலும் மக்களுக்காக உழைக்கும் இயக்கமாகும்.

நடுத்தர மக்கள் மீது சுமை ஏற்றும் வகையில் பெட்ரோல், டீசல் விலை உயர்வு ஏறிக்கொண்டே செல்கிறது. அது மட்டுமின்றி விலைவாசிகளும் உயர்ந்து கொண்டு செல்கிறது. விவசாயிகள்

தாங்கள் விளைவித்த நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய முடியாத நிலையுள்ளது.

விழுப்புரம் உள்ளிட்ட மழை இல்லாமல் பாதிக்கப்பட்ட பகுதிகள் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாய நிலங்களுக்கு முதல்வர் ஜெ., நிவாரணம் அறிவித்துள் ளார். இந்த நிவாரண உதவி உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு சென்றடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு எம்.எல்.ஏ., கதிரவன் பேசினார்.

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்தல், மதுரை பன்னாட்டு விமான நிலையத்திற்கு மத்திய, மாநில அரசுகள் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பெயரை சூட்ட வேண்டும்.

விழுப்புரம் நகரில் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் உருவசிலையை அரசு சார்பில் நிறுவுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாணவரணி பொதுச்செயலாளர் பாஸ்கரபாண்டியன் நன்றி கூறினார்.

## மிளகாய் விவசாயிகளுக்கு தற்போது பெய்த மழையால்... பயன் தொடர் மழை பெய்தால் அழுகும் அபாயம்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை மிளகாய் விவசாயத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தாலும், தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் அழுகிவிடும் அபாயமும்

உள்ளதால் விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.மாவட்டத்தில் பரமக்குடி, திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், ராமநாதபுரம், முதுகுளத்தூர், சாயல்குடி, கமுதி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பர

ப்பளவில் மிளகாய் சாகுபடி நடந்து வருகிறது. பருவமழை பொய்ப்பால், நெற்பயிர்கள் சாவியாகி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மிளகாய் சாகுபடி இப்பகுதி விவசாயிகளுக்கு ஆறுதல் ஏற்படுத்தி வ

ருகிறது. தற்போது, ஒரு சில பகுதிகளில் மிளகாய் விளைச்சல் பருவத்தை எட்டியுள்ளது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்குமா? என்பது தான் ÷

கள்விக்குறியாக உள்ளது. பழங்குளத்தை சேர்ந்த விவசாயி, ஆறுமுகம் கூறியதாவது: எந்தாண்டும் இல்லாத அளவிற்கு நடப்பாண்டு பருவமழை தவறியதால், பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி

சாவியாகி போனது. கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். இந்நிலையில், மிளகாய் சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் அக்கறை காட்டினர். தற்போது, காய் விளைந்து பயன்
தரும் வேளையில் இப்படி திரென மழை பெய்ததால், ஒரு புறமும் மகிழ்ச்சியும், மறுபுறமும் பயமும் தொற்றிக் கொண்டுள்ளது. காரணம், இரண்டு நாள் மழையே போதுமானது. தொடர்ந்து மழை பெய்தால்
செடிகள் அனைத்தும் அழிந்துவிடும். இதனால், மிளகாய் செடிகளில் தண்ணீர் தேங்கிவிடாமல் இருக்க தண்ணீரை வடித்து வருகிறோம், என்றார்.தோடக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: எதிர்பாராத
இந்த மழை மிளகாய், எள், பருத்தி, உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. தொடர் மழை பெய்தால், இந்த பயிர்களுக்கு சிக்கல் ஏற்படும், என்றார்.

## கடும் வறட்சியால் கால்நடைகளுக்கு தீவனம்... மானியத்துடன் தீவன குழி அமைக்க யோசனை

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் கடுமையான வறட்சியால், கால்நடைகளுக்கு தீவனம் தட்டுபாடு ஏற்படும் அபாயத்தால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில் ஜெர்சி, சிந்து, நாட்டுகிராஸ், சிந்து கிராஸ், சீமை, சுகந்தினி, செச்செப், ஃபிளாக் அண்ட் ஒயிட் ஆகிய மாடுகளும், எருமை மாட்டில் முரா, நாட்டு கிராஸ் ஆகிய ரகங்கள் வளர்க்கப்படுகின்றன. பருவ காலங்களில் சாகுபடி செய்யப்படும் விவசாயம் மூலம் கிடைக்கும் வைக்கோல், கரும்பு தோகை, சோளத்தட்டு, நிலக்கடலை செடி போன்றவை
கோடைக்காலங்களில் கால்நடைகளுக்கு உணவாக பயன்படுத்தப்படுகிறது.
கடந்த சில ஆண்டுகளாக விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை, அதிகப்படியாக உரச்செலவு, நவீன கலாச்சாரத்துக்கு மாறிவரும் வாழ்க்கை முறையால் விவசாய நிலங்களின் பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு குறைகிறது.
கால்நடைகளுக்கு தேவையான தீவனம் கிடைக்காததால், கால்நடைகள் மூலம் பெறப்படும் பால் உள்ளிட்ட உணவு பொருட்களிலும் மனித உடலுக்கு தேவையான சத்தும் குறைவாக கிடைக்கிறது. சென்ற ஆண்டில் பருவமழை தவறி, பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்படாததால் விளை நிலங்கள் வறண்டு கிடக்கிறது. சில மாதமாக வாட்டும் கோடை வெப்பத்தால் இப்போதே தீவனத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாட்டு தீவனங்களான புல், சோளம், கேழ்வரகு, புண்ணாக்கு ஆகியவை விலையும் உயர்ந்துள்ளது. மாட்டு தீவனத்தில் விலை உயர்வாலும், தட்டுப்பாடு ஏற்படுவதாலும், மாடு வளர்ப்பவர்கள் பலர், மாட்டை விற்க துவங்கி உள்ளனர். சில விவசாயிகள் மாட்டு தீவன பயிரை வளர்த்து, மாடுகளுக்கு தேவையான தீவனங்களை வழங்கினர். வறட்சியால் தீவனப்பயிர்கள் காய்வதால், மாடுகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது:

தமிழகத்தில் கோடை வெயிலால், பல பகுதிகளிலும் தீவன தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. மாட்டு தீவனங்களான புண்ணாக்கு, சோளம், கேழ்வரகு, புல் விலை உயர்ந்து வருகிறது. தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் மாடு வளர்ப்பவர்கள் பலர் மாடுகளை விற்று வருகின்றனர். விவசாய நிலங்கள் வைத்துள்ள சிலர் தங்கள் மாடுகளை பராமரிக்கின்றனர். சென்ற ஆண்டு முதல் ஏற்பட்ட வறட்சியால் விளை நிலங்கள் வறண்டு காணப்படுகிறது. மாடுகளை காப்பாற்ற, தீவனப்பயிர் வளர்த்து வந்தோம். தண்ணீரில்லாததால் தீவனப்பயிர்கள் காய்ந்துள்ளது. மழை பெய்தால் மட்டுமே கால்நடைகளுக்கு தேவையான தீவனம் வழங்க முடியும். கால்நடைத்துறை, வேளாண் துறை இணைந்து, கால்நடைகளை காக்க தீவனப்பயிர்களை வளர்த்து குறைந்த விலையில் வழங்கலாம். புண்ணாக்கு, சோளம், கேழ்வரகு, புல் போன்றவைகளை குறிப்பிட்ட காலத்துக்கு அரசு குறைந்த விலையில் சப்ளை செய்தால் கால்நடைகள் அழிவை தடுக்கலாம், என்றனர்.

கால்நடை பராமரிப்பு துறை அதிகாரி கூறியதாவது:

கோடை காலத்தில் தீவன தட்டுபாட்டை சமாளிக்க தீவன குழி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீவன குழி அமைக்க, 7:4:4 என்ற முறையில் நான்கு குழிகள் அமைக்க வேண்டும். ஒரு குழியில் ஒரு டன் சோகை வரை வைத்து, 10 கிலோ உப்பு, 10 கிலோ யூரியா, 20 கிலோ சாக்கிரின் ஆகியவை போட்டு காற்று புகாமல் பார்த்து கொள்ள வேண்டும். 45 நாட்கள் வரை வைத்து பதப்படுத்தினால், கோடை காலங்களில் கால்நடைகளுக்கு தேவையான தீவனம் கிடைக்கும். தீவன குழி அமைக்க, மத்திய அரசு 100 சதவீத மானியம் வழங்குகிறது, என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

15.02.2013 A.M

## வயலில் இறங்கி நெல் அறுவடை பிரான்ஸ் மாணவர்கள் ஆர்வம்



காரைக்கால் : இந்தியாவில் நடைபெறும் வேளாண் நுணுக்கங்கள் பற்றி நேரில் கண்டறிந்து பயிற்சி பெற பிரான்ஸ் நாட்டு லைசி அக்ரிகோல் வேளாண் கல்லூரி, கடந்த 5 ஆண்டுகளாக மாணவர்களை இந்தியாவுக்கு அனுப்பி வருகிறது. அதன்படி, பிரான்ஸ் மாணவர்கள் 20 பேர், கடந்த ஜனவரி 31,ந் தேதி காரைக்கால் ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்தனர்.

பிரான்ஸ் மாணவர்கள் 10 நாட்களாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு இடங்களுக்கு சென்று வேளாண்மை நுணுக்கங்களை நேரடியாக பார்வையிட்டு, தங்கள் சந்தேகங்களை அங்குள்ள விவசாயிகளிடம் கேட்டு தெரிந்துகொண்டனர். பின்னர், நேற்று முன்தினம் மாலை மீண்டும் காரைக்கால் வந்த மாணவர்கள், காரைக்கால் வேளாண் கல்லூரி சார்பில், அம்பகரத்தூர் பாசனதாரர் சங்கத்துடன் இணைந்து, அங்குள்ள வயல்களில் நெல் அறுவடை பணியில் ஈடுபட்டனர்.

இந்தியாவில், மனித உழைப்பும் அதிகமாக உள்ளது. மாணவர்களுக்கு இது புதுமையாக இருப்பதால், அதனை ஆர்வத்துடன் கவனித்து தாங்களும் அப்பணியில் ஈடுபட்டனர். காரைக்கால் விவசாயிகள் அளித்த பயிற்சியின்படி பிரான்ஸ் மாணவர்கள் வயலில் இறங்கி நெல்

அறவடை செய்தனர். பின்னர் களத்துமேட்டுக்கு எடுத்து வந்து, நெல் உதிர்த்தல், கருக்கா தூற்றுதல் உள்ளிட்ட பணிகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

## இரண்டு மாதங்களுக்கு பிறகு தென் மாவட்டங்களை குளிர்வித்த மழை



நெல்லை : நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் பரவலாக பெய்த மழை பூமியை குளிர்வித்துள்ளது. அதிகபட்சமாக ராதாபுரத்தில் 63 மி.மீ. மழையும் பாபநாசம், அம்பையில் 55 மில்லி மீட்டர் மழையும் பதிவானது. கடந்த ஆண்டு கோடை வெப்பம் அதிகபட்சமாக 108 டிகிரி வரை பதிவானது. இந்த ஆண்டு கோடையை இப்போதே வரவேற்கும் விதமாக கடந்த 2 வாரங்களாக வெயிலின் அளவு அதிகரித்து வந்தது.

நேற்று முன்தினம் பிற்பகலில் இருந்து வானத்தில் கருமேகம் திரண்டு, அவ்வப்போது சாரல் மழை பெய் தது. இரவு மற்றும் நேற்று அதிகாலையில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பல இடங்களில் கனமழை கொட்டியது. மெஞ்ஞானபுரம், உடன்குடி உள்ளிட்ட சில பகுதிகளில் 3 மணி நேரம் நல்ல மழை பெய்தது. நெல்லையில் பாவூர்சத்திரம், ஆலங்குளம், சேரன்மகாதேவி, பாபநாசம், அம்பாசமுத்திரம், வள்ளியூர் உள்ளட்ட பகுதிகளில் அதிகாலை பரவலாக மழை பெய்தது.

தென் மாவட்டங்களில் கனமழை: நேற்று முன்தினம் மாலையில் குமரி கடல் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவானது. அது மேலும் வலுப்பெற்றுள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் மதுரை, ராஜாபாளையம், விருதுநகர், டி.கல்லுப்பட்டி, கள்ளிக்குடி திருமங்கலம், திண்டுக்கல், தேனி, சிவங்கை, கொடைக்கானல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று பகலில் நல்ல மழை பெய்தது.

இந்த பருவ நிலை மாற்றத்தால் மதுரையில் நேற்று முன்தினம் பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு நேரத்தில் மழைத்துளிகள் பெரிய அளவில் விழுந்தது. தொடர்ந்து மதுரையில் நேற்று காலையில் சுமார் ஒரு அரைமணி நேரம் நல்ல மழை பெய்தது. ஒரு சில இடங்களில் கால்மணி நேரம் மழை பெய்தது.
திருமங்கலத்தில் விட்டு விட்டு பெய்த மழை நேற்று காலை பலத்த மழையாக பெய்து. சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டத்திலும் நிலவுகிறது. 2 மாதங்களுக்கு பின் மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

குமரியில் விடிய, விடிய மழை: குமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலையில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை இருந் தது. இதற்கிடையே நேற்று அதிகாலை 2 மணியில் இருந்து குமரி மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்ய தொடங்கியது. இடி, மின்னலும் இருந்தது. நகர்ப்புற பகுதிகள் மட்டுமின்றி மலை பகுதிகளிலும் மழை பெய்தது. நீண்ட நாட்களுக்கு பிறகு பெய்த மழையால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடலில் சூறை காற்று காரணமாக நேற்று காலை பெரும்பாலான மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வில்லை. நாட்டுப்படகு, பைபர் படகுகளில் மீன்பிடிக்க சென்றவர்கள் அவசர, அவசரமாக கரை திரும்பினர். சூறை காற்றால் மீனவர்களின் படகுகள் சேதம் அடைந்தன. சூறைக்காற்று: குமரி மாவட்டம் களியக்காவிளை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் மழையுடன் சூறைக்காற்றும் வீசியது. இதில் பல இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.
களியக்காவிளை அருகே உள்ள பெருங்குளம் ஏலா பகுதியில் வாழைகள் முறிந்து விழுந்தன.

திருவாரூர், நாகையில் நெல் அறுவடை பாதிப்பு

திருவாரூர் : திருவாரூர், நாகை மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.
கன்னியாகுமரி அருகே வங்க கடலில் வளி மண்டலத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக டெல்டா மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்தது. நாகை மாவட்டத்தில் பகல் 11.45 மணி முதல் 12.45 மணி வரை மிதமான சாரல் மழை பெய்தது. திருவாரூர் மாவட்டத்தில் காலை 6 மணிமுதல் 8 மணி வரை பலமாகவும், 11.30 மணி முதல் 2 மணி வரை மிதமாகவும் பெய்தது. பின்னர் வானம்

மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் வழக்கமாக 4.25 லட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி நடைபெறும். இந்தாண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக 3 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கரில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டருந்தது. பருவ மழை பொய்த்தது, கர்நாடகா காவிரி நீரை தராதது போன்ற காரணங்களால் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் கருகி விட்டது.

மீதி வயல்களில் ஆற்று நீர், பம்பு செட் நீர் மற்றும் மற்றவர்களிடமிருந்து பம்பு செட் நீரை கடன் வாங்கி விவசாயிகள் போராடி பயிரை காப்பாற்றினர். தற்போது 2.10 லட்சம் ஏக்கரில் அறுவடை நடந்து வந்தது. 1 லட்சம் ஏக்கர் பயிர் அறுவடைக்கு தயாராக வில்லை. நேற்று பெய்த மழையால் அறுவடை பணி பாதித்தது. எந்திரம் மூலம் அறுவடை செய்து வயல்களிலேயே கொட்டப்பட்டுள்ள நெல் நனைந்துள்ளது. வயல்களில் சேகரிக்காமல் இருந்த வைக்கோல் மழையில் நனைந்து சேதம் அடைந்துள்ளது. இந்த வைக்கோலை கால்நடைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் கதிர் முற்றி சாய்ந்துள்ள பயிர்களில் உள்ள நெல் மணிகள் முளைக்க தொடங்கிவிடும் என விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர்.

நெல் கொள்முதலும் பாதிப்பு: இது குறித்து திருவாரூர் அடுத்த மருதமாணிக்கம் விவசாயி ராஜேந்திரன் கூறுகையில், நீர் பிடிப்பு பகுதிகளில் போதிய அளவு பருவ மழை பெய்யாததாலும், கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததாலும் எங்கள் பகுதியில் மிகுந்த சிரமத்துடன் நெல் சாகுபடி செய்தோம்.

தற்போது அறுவடை செய்கிற நேரத்தில் பெய்த மழையால் நெல் முழுவதும் நனைந்துள்ளது. இதனால் நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நெல்லை காய வைக்கவே நு£ற்றுக்கணக்கில் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மழையால் நெல்லில் ஏற்பட்டுள்ள ஈரப்பதத்தினை தளர்த்தி அனைத்து நெல்லையும் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய வேண்டும் என்றார்.

## சம்பா பயிருக்கு பயனில்லை விவசாயிகள் குற்றச்சாட்டு



தஞ்சை : கர்நாடகா திறந்துவிட்ட தண்ணீரால் சம்பா பயிருக்கு பயனில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர். டெல்டா மாவட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் சம்பா சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில் மத்திய குழு ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்ததை தொடர்ந்து, காவிரியில் 2.44 டிஎம்சி தண்ணீர் திறக்க கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, 4ம் தேதி இரவு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் கல்லணையில் இருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டது.

நீர்வரத்து குறைந்ததால் கல்லணையில் இருந்து டெல்டா மாவட்ட சம்பா சாகுபடிக்காக கல்லணை கால்வாய், வெண்ணாறுகளில் தண்ணீர் திறந்துவிடப்படுவதும் நேற்று முன்தினம் நிறுத்தப்பட்டது. குடிநீர் தேவைக்காக தற்போது கொள்ளிடத்தில் மட்டும் 200 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

சம்பா சாகுபடிக்காக கல்லணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் அதிகபட்சமாக 5 கிமீ வரை கூட செல்லவில்லை. ஆறுகளில் ஆங்காங்கே உள்ள பள்ளத்தில் நிறப்பியதுபோக, காய்ந்து கிடந்த பூமி மீதி தண்ணீரை வேகமாக உறிஞ்சிக்கொண்டது. இதனால் கல்லணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் நடுமடை பகுதியைக்கூட அடையாமல் விவசாயத்திற்கு பயனற்றுப்போய்விட்டது.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் கக்கரை சுகுமார் கூறுகையில், ‘வெண்ணாறு, காவிரி உள்ளிட்ட ஆறுகளில் மணல் கொள்ளை நடந்துள்ளது. கடந்த ஆண்டு 6 மாதம் தண்ணீர் வந்தது. ஆனால், இந்த ஆண்டு ஒரு மாதம் மட்டுமே தண்ணீர் வந்தது. இதனால் அளவுக்கு அதிகமாக மணல் கொள்ளை நடந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் நாளொன்றுக்கு ஆயிரம் டாரஸ் லாரிகளில் மணல் கேரளத்திற்கு கொண்டுசெல்லப்படுகிறது.

இதனால், திறக்கப்பட்ட நீர் பள்ளங்களில் நிரம்பியதே தவிர விவசாயத்திற்கு பயனில்லாமல் போய்விட்டது‘ என்றார்.

விவசாயிகள் சங்க பிரதிநிதி வக்கீல் ஜீவக்குமார் கூறுகையில், ‘தண்ணீர் திறக்கப்பட்டதா என்பதற்கான அடையாளமே இல்லாமல் போய்விட்டது. நடுமடை பகுதிக்கே தண்ணீர் வரவில்லை. இதனால், கடைமடைக்கு தண்ணீர் இல்லை. தண்ணீர் திறந்ததும் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தைத்தான் ஏற்படுத்தியுள்ளது. உச்சநீதிமன்ற உத்தரப்படி 7ம் தேதி காவிரியில் 2.44 டிஎம்சி தண்ணீரை கர்நாடக அரசு உண்மையாகவே திறந்துவிட்டிருந்தால் அது 2 நாளில் மேட்டூர் அணை வந்தடைந்திருக்கும்.

ஆனால், தண்ணீர் திறந்து 5 நாட்களாகியும் அது மேட்டூர் அணைக்கு முன்னதாக உள்ள பிலிகுண்டுலு பகுதிக்குக்கூட வரவில்லை. ஆறு வற்றி காய்ந்து இருந்ததால் தண்ணீரை பூமி உறிஞ்சிக்கொண்டது என்று கர்நாடகம் கூறுகிறது. ஆனால், உரிய அளவு தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிடவில்லை என்பதே உண்மை. மேலும், மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட 2 டிஎம்சி தண்ணீர் கல்லணைக்கு வந்து, கல்லணையிலிருந்து வெளியேற்றப்பட்ட தண்ணீரும் சுமார் 5 கிமீ வரைகூட செல்லவில்லை. இந்த தண்ணீர் திறப்பும் கண்துடைப்புதான்Õ என்றார்.

**கர்நாடகா திறந்த காவிரி நீர் 5 நாளுக்கு பின் மேட்டூர் அணை வந்தது**



பென்னாகரம் : உச்ச நீதிமன்ற உத்தரவுபடி கேஆர்எஸ் அணையில் இருந்து கர்நாடகம் திறந்து விட்ட காவிரி நீர் 5 நாட்களுக்கு பிறகு நேற்று இரவு மேட்டூர் அணையை வந்தடைந்தது. கடந்த 9ம் தேதி காலை 11 மணியளவில் கிருஷ்ண ராஜசாகர் அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. 170 கி.மீ தூரத்தில் உள்ள தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு 48 மணி நேரத்தில் வந்திருக்க வேண்டும். ஆனால் காவிரி ஆறு கடந்த சில மாதங்களாக வறண்டு கிடப்பதால், வழியில் உள்ள மேடு, பள்ளங்களில் நிரம்பி வருவதற்கு

தாமதமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பல தடைகளை கடந்து நேற்று அதிகாலை 3 மணி அளவில் காவிரி நீர் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவை வந்தடைந்தது. கே.ஆர்.எஸ். அணையில் இருந்து நீர் திறந்து விடப்பட்டு, 5 நாட்களுக்கு பின்னர் தமிழகத்தை தண்ணீர் வந்தடைந்துள்ளது.

நேற்று காலை, மத்திய நீர் ஆணைய பணியாளர்கள் கணக்கிட்ட போது சுமார் 2 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனால் பல நாட்களுக்கு பின்னர் ஒகேனக்கல் அருவியில் அதிக அளவில் நீர் கொட்டுகிறது. வறண்டு கிடந்த பாறைகளின் நடுவில் நீர் பாய்கிறது. நீர் வரத்து குறித்த தகவல் அறிந்ததும், சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த மக்கள் திரளாக வந்து குளித்து மகிழ்ந்தனர். ஒகேனக்கல்லில் இருந்து தண்ணீர் 40 கி.மீ தொலையில் உள்ள மேட்டூர் அணைக்கு இரவு வந்து சேர்ந்தது.

## பட்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விழிப்புணர்வு கூட்டம்

பவானி, : பட்டுவளர்ச்சித்துறையின் கிரியா ஊக்கி திட்டம் சார்பில் தொழில்நுட்ப விழிப்புணர்வுக் கூட்டம் ஆப்பக்கூடல் அ.புதுப்பாளையத்தில் நேற்று நடைபெற்றது.
மத்திய பட்டு வாரிய விஞ்ஞானிகள், ஐசிஐசிஐ காப்பீடு நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்துக்கு ஆப்பக்கூடல் பேருராட்சித் தலைவர் ராமச்சந்திரன் தலைமை தாங் கினார். அவர் பேசுகையில், கடந்த 10 வருடங்களாக பட்டு வளர்ப்புத் தொழில் செய்து வருவதாகவும், இதில் உள்ள நன்மைகள் குறித்தும் விளக்கிப் பேசினார்.
பவானி பட்டுவளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர் சண்முகம் வரவேற்றுப் பேசினார். கோபி மத்திய பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி மணி, மண் வளம் காத்தல் தொழில்நுட்பம் குறித்து விளக்கினார். ஈரோடு பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குனர் வைத்தியநாதன் திட்ட விளக்க உரையாற்றினார். வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடம் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.
பட்டுத் தொழிலில் மகளிர் விவசாயிகளுக்கு இலவச மருத்துவ காப்பீடு குறித்து மகளிர் காப்பீட்டு திட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியசாமி விளக்கிப் பேசினார். தொடர்ந்து, காப்பீடு திட்ட பயனாளிகளுக்கு ரூ.48,501க்கான காசோலைகள் வழங்கப்பட்டன. பவானி தொழில்நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் சண்முகம் நன்றி கூறினார்.

### வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் புதிய முறை பருத்தி ஏலத்திற்கு எதிர்ப்பு விவசாயிகள் சாலை மறியல்

நாமக்கல், : வேளா ண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் புதிய முறைப்படி பருத்தி ஏலம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். நாமக்கல்-திருச்செங் கோடு சாலையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகள் இங்கு பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். இதுவரை விவசாயிகள் முன்னிலையில் பகிரங்க பருத்தி ஏலம் நடைபெற்று வந்தது. ஆனால் தற்போது, மூடிய டெண்டர் முறையில் பருத்தி ஏலம் நடைபெறும் என சங்க நிர்வாகிகள் நேற்று விவசாயிகளிடம் தெரிவித்தனர். புதிய முறைப்படி பருத்தி ஏலம் நடைபெற்றால் மிக குறை வான விலையே கிடைக்கும் எனக் கூறி விவசாயிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் புதிய டெண்டரில் யாரும் கலந்து கொள்ளாமல் இருந்தனர். அதிகாரிகளும் பழைய முறைப்படி ஏலம் நடத்த மறுத்தனர். இத னால் நேற்று மாலை வரை பருத்தி ஏலம் நடைபெறவில்லை

இதனால் ஆத்திரம் அடைந்த பருத்தி விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் நேற்று மதியம் நாமக்கல்-திருச்செங்கோடு சாலையில் திடீர் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது பற்றி தகவல் அறிந்த நாமக்கல் போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து மறியலில் ஈடுபட்டவர்களுடன் சமாதானபேச்சுவார்த்தை நடத்தினர். சங்கத்தின் அறிவிப்பின் படி இந்த வாரம் புதிய முறைப்படி ஏலம் நடப்பதை யாரும் தடுக்க முடியாது. கோரிக்கை குறித்து வரும் வாரங்களில் பேசி தீர்வு காணும்படி போலீசார் அவர்களிடம் அறிவுறுத்தினர். இதை தொடர்ந்து விவசாயிகள் மறியலை கைவிட்டு விட்டு கலைந்து சென்றனர்.

இம்மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் சுமார் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### தண்ணீர் தட்டுப்பாடால் மேட்டுதிருக்காம்புலியூரில் 50 ஏக்கர் வெற்றிலை கொடிக்கால் காய்ந்து வீணாகும் அவலம்

கிருஷ்ணராயபுரம், : தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக மேட்டுதிருக்காம்புலியூரில் சுமார் 50 ஏக்கரில் பயிரிடப்பட்டள்ள வெற்றிலை கொடிக்கால் காய்ந்து போனதால் உரிய நிவார ணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணராயபுரத்தை அடுத்துள்ளது திருக்காம்புலியூர், மேட்டுதிருக்காம்புலியூர். இப்பகுதியில் வெற்றிலை கொடிக்கால், வாழை, நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கட்டளை

மேட்டுவாய்க்கால், புதுவாய்க்கால், காட்டுவாய்க்காலை நம்பி தான் இப்பகுதியில் விவசாய பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு திருக்காம்புலியூர், மேட்டு திருக்காம்புலியூர் பகுதிகளில் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை கொடிக்கால் சாகுபடி செய்யப்பட்டது. அதிகளவில் தண்ணீர் தேவைப்படும் பயிர்களில் வெற்றிலை கொடிக்காலும் அடங்கும். இது வரை வாய்க்காலில் வரும் தண்ணீரை வைத்து வெற்றிலை கொடிக்காலை விவசாயிகள் காப்பாற்றி வந்தனர். கடந்த சில வாரங்களுக்கு முன்பு காவிரி ஆற்றில் வந்த தண்ணீர் முழுவதையும் வாய்க்காலில் திறந்து விடாமல் ஆற்றில் திருப்பி விடப்பட்டது. இதன்விளைவாக போதிய தண்ணீர் கிடைக்காமல் இப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சுமார் 50 ஏக்கர் பரப்பளவிலான வெற்றிலை கொடிக்கால் முழுவதும் காய்ந்து போனது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்ட த்தை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து வெற்றிலை விவசாயி சிதம்பரம் கூறுகை யில், வயல் குத்ததை, உற்பத்தி செலவு என ஒரு ஏக்கர் வெற்றிலை சாகுபடி செய்ய ரூ.5 லட்சம் வரை செலவாகும். வெற்றிலை கொடிக்காலுக்கு போதியளவு தண்ணீர் இல்லாமல் வெற்றிலை கொடி முழுவதும் காய்ந்து கிடக்கிறது. பல லட்ச ரூபாய் முதலீடு செய்த விவசாயிகள் அனைவரும் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளோம். எனவே அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

இதுகுறித்து விவசாயி மாரியப்பன் கூறுகை யில், கடன் வாங்கி நில த்தை குத்தகைக்கு பெற்று வெற்றிலை கொடிக் கால் சாகு படி செய்திருந்தோம்.

ஆனால் போட்ட மூலதனத்திற்கு வேட்டு வைப்பது போல் தண்ணீர் இல்லாததால் இப்பகுதியில் வெற்றிலை கொடிக்கால் காய்ந்து போய்விட்டது.

ஒரு சில இடங்களில் காய்ந்து வரும் வெற்றிலை கொடிக்காலை காப்பாற்ற வயல்களில் கிணறு வெட்டியும், போர்வெல் மூலம் தண்ணீர் பாய்ச்சி காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். விவசாய பணிகளை கருத்தில் கொண்டு காவிரியில் தண்ணீர் முழுவதையும் விடாமல் வாய்க்காலிலும் தண்ணீர் செல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## நன்னீரில் மீன் வளர்ப்பு வேதை விவசாயிக்கு விருது

வேதாரண்யம், : நாகை மாவட்டம் வேதாரண்யத்தை சேர்ந்தவர் செந்தில்குமார், விவசாயி. இவர் உப்புநீரில் வளரக்கூடிய ரோகு, கட்லா, மிர்கால், சிலேபி, கொ டுவா போன்ற மீன்களை நன்னீரில் தீவனம் எதுவும் இல்லாமல் இயற்கையான முறையில் வளர்த்து சாதனை படைத்துள் ளார். இதனை பாராட்டி ஆந்திர மாநிலம், விஜயவாடா கல்லூரியில் நடந்த அக்குவ அக்கிரியா

இந்தியா 2013 என்ற நிகழ்ச்சியில் இந்தியன் பெஸ்ட் பார்மர் விருதினை மத்திய வர்த்தக துறை அமைச்சர் புரந்தேஸ்வரி வழங்கினார்.

## மல்பெரி செடி வளர்த்தால் நல்ல வருமானத்திற்கு வாய்ப்பு திருவாரூர் கலெக்டர் தகவல்

நன்னிலம், : மல்பெரி செடி வளர்த்தால் நல்ல வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளதாக திருவாரூர் கலெக்டர் நடராஜன் பேசினார்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அடுத்துள்ள சேங்கனூர் ஊராட்சியில் கலெக்டர் நடராஜன் தலைமையில் மக்கள் தொடர்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. ஆர்டிஓ பொன்னம்மாள் முன்னிலை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் சம்பத், மாவட்ட கவுன்சிலர் உதயகுமார், ஒன்றிய கவுன்சிலர் சாதிக்பாட்சா, வாழ்க்கை ஊராட்சி தலைவர் மணி வாழ்த்திப் பேசினர்.

முகாமில், கால்நடைதுறை, விவசாயதுறை, பொது சுகாதாரதுறை, தாட்கோ, மீன்வளத்துறை, தோட்டக்கலைத்துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டு மக்கள் நல திட்டப்பணிகள் குறித்து பேசினர். முகாமில் கலெக்டர் நடராஜன், 244 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஊராட்சி தலைவர் கெம்புராஜ் வரவேற்றார். நன்னிலம் தாசில்தார் கோவிந்தராஜன் நன்றி கூறினார்.

கலெக்டர் நடராஜன் பேசும்போது,

திருவாரூர் மாவட்டம் பரந்த ஆற்று நீர் வெளி கொண்ட மாவட்டமாக இருப்பதால் வண்டல் மணல் களிமண் கலந்த நிலமாக இருப்பதாலும் இங்கு நிலவுகின்ற தட்ப வெப்பத்திற்கேற்ப மல்பெரி செடிகள் வளர்க்கலாம். மகிழஞ்சேரியில் மாவட்ட நிர்வாகத்தின் உதவியோடு வங்கிக்கடன் வழங்கப்பட்டு செடிகள் பயிரிடப்பட்டு இன்று நன்றாக வளர்ந்து காணப்படுகிறது. ஆறுமாத காலத்தில் அதனை பயிரிட்ட விவசாயி கல்யாணி நல்ல வருமானத்தை பெற உள்ளார். மல்பெரி செடி இலையை பட்டுப்புழுக்கள் உணவாக உண்டு தங்களை சுற்றி அதன் வாயிலிருந்து வரும் நீரால் கூடுகட்டி வாழும். ஆறு மாதத்தில் அதிலிருந்து பட்டு நூல் எடுக்கப்படும். இதன் மூலம் கிராம பொருளாதாரம் முன்னேற்றம் காணும்.

தற்போது விவசாய பணிகள் நிறைவடைந்துள்ளதால் வரும் ஏப்ரல், மே மாதங்களில் மாவட்டத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மாலை நேரத்தில் சென்று அங்குள்ள மக்களோடு கலந்து பேசி அக்கிராமத்திலுள்ள குறைகளை போக்க நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளேன் என்று பேசினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

15.02.2013 A.M

## குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பு: நாளை அநேக இடங்களில் பலத்த மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு

சென்னை

இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தென்மாவட்டங்களில் இன்றும் அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மைய இயக்குனர் ஸ்டெல்லா தெரிவித்தார்.

குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை

தமிழ்நாட்டில் கடந்த வடகிழக்கு பருவமழை சரியாக பெய்யவில்லை. இதனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அதன்காரணமாக தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களில் அநேக இடங்களிலும், டெல்டா பகுதிகளிலும் நேற்று முன்தினம் மழை பெய்துள்ளது. இன்றைய வானிலை குறித்து சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் ஸ்டெல்லா கூறியதாவது:–

இன்று அநேக இடங்களில் மழை

இலங்கை மற்றும் அதையொட்டி உள்ள வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நிலைகொண்டுள்ளது. அதுபோல லட்சத்தீவு மற்றும் கர்நாடகா அருகேயும் ஒரு குறைந்தகாற்றழுத்த தாழ்வு நிலை இருந்தது. இந்த இரண்டும் இப்போது ஒன்றுசேர்ந்து உள்ளது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலைகாரணமாக தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களில் இன்று (வெள்ளிக்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும். டெல்டா மாவட்டங்களில் மழைபெய்யும். தென்மாவட்டங்கள் கடலோர பகுதிகளிலும், டெல்டா மாவட்டங்களிலும் ஒரு சில இடங்களிலும் ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்யலாம். இதரமாவட்டங்களில் மழைபெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று காலை 8–30மணி நிலவரப்படி கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

தூத்துக்குடியில் மழை

ராதாபுரம், பேரையூர் தலா 6செ.மீ., அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, மயிலாடி, விருதுநகர், திருச்செந்தூர் தலா 5 செ.மீ., சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தான்குளம் தலா 4 செ.மீ. தூத்துக்குடி, விளாத்திக்குளம், சிவகிரி, நாங்குநேரி, மணிமுத்தாறு, குளச்சல், நாங்குநேரி சிவகாசி, அருப்புக்கோட்டை, தொண்டி தலா 3 செ.மீ., பாம்பன், பரமக்குடி, ராமேஸ்வரம், ராமநாதபுரம், ஸ்ரீவைகுண்டம், குளித்துறை, இரணியல், தக்கலை, பேச்சிப்பாறை, தென்காசி தலா 2செ.மீ. மழை பெய்துள்ளது. இவ்வாறு இயக்குனர் ஸ்டெல்லா தெரிவித்தார்.

## கோபி அருகே கூகலூரில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி

கோபிசெட்டிபாளையம்

கோபிசெட்டிபாளையம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி கூகலூரில் நடந்தது. இந்த பயிற்சிக்கு துணை வேளாண்மை அதிகாரி நாகராஜ் தலைமை தாங்கினார். உதவி வேளாண்மை அதிகாரி ராஜா முன்னிலை வகித்தார். கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கலந்துகொண்டு மண்புழு உரத்தின் முக்கியத்துவம் குறித்தும், தயாரிப்பு முறை பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்து பேசினார். மண்புழுக்களை தேர்வு செய்தல், மண்புழு உரத்தை பிரித்தெடுத்தல், மூலப்பொருட்கள் தயாரிப்பு முறை ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் கூகலூர், தண்ணீர்பந்தல்புதூர், தாழைக்கொம்புபுதூர், சர்க்கரைபாளையம், பொன்னாச்சிப்புதூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## கடுகு உற்பத்தி 71 லட்சம் டன்னாக உயர வாய்ப்பு

நடப்பு ஆண்டில் (2013) கடுகு உற்பத்தி 71 லட்சம் டன்னாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. வடமேற்கு இந்தியாவில் பருவநிலை சாதகமாக உள்ளதால் சென்ற ஆண்டை விட உற்பத்தி ஏறக்குறைய 20 சதவீதம் அதிகரிக்கும் என இந்திய தாவர எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடுகு உற்பத்தியில் ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அங்கு நடப்பு ஆண்டில் 34 லட்சம் டன் கடுகு விளையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 2012–ஆம் ஆண்டின் உற்பத்தியை காட்டிலும் 24 சதவீதம் அதிகமாகும்.

சர்வதேச அளவில் சமையல் எண்ணெய் இறக்குமதியில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. இந்த நிலையில் கடுகு உற்பத்தி அதிகரிப்பதால் உள்நாட்டில் சப்ளை அதிகரித்து சமையல் எண்ணெய் இறக்குமதிக்கான தேவை ஓரளவு குறையும் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

**மூன்று ஆண்டுகளுக்குப் பின், ஜனவரி மாதத்தில் நிபுணர்களின் மதிப்பீடுகளுக்கு மாறாக பணவீக்கம் 6.62 சதவீதமாக குறைந்தது**

புதுடெல்லி,

மூன்று ஆண்டுகளுக்கு பின் முதல் முறையாக, ஜனவரி மாதத்தில், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் 6.62 சதவீதமாக குறைந்துள்ளது. நிபுணர்களின் மதிப்பீடுகளுக்கு மாறாக பணவீக்கம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, ஜனவரியில் பொது பணவீக்கம் 7 சதவீதத்தை எட்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. டிசம்பர் மாதத்தில் இது 7.18 சதவீதமாக இருந்தது.

**கோதுமை, அரிசி**

ஜனவரி மாதத்தில் கோதுமை, அரிசி, காய்கறி உள்பட பல்வேறு அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. எனினும் உற்பத்தி பொருள்கள் விலை குறைந்ததால், நடப்பு நிதி ஆண்டில் தொடர்ந்து நான்காவது மாதமாக பணவீக்கம் குறைந்துள்ளது. நவம்பர் மாதத்தில் 7.24 சதவீதமாக இருந்த பணவீக்கம், டிசம்பரில் 7.18 சதவீதமாக குறைந்தது. இது, 2012 ஜனவரி மாதத்தில் 7.23 சதவீதமாக இருந்தது.

வெங்காயம் விலை 112 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 79 சதவீதம் அதிகரித்துள்ளது. முக்கிய உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் விலை முறையே 11.88 சதவீதம் மற்றும் 10.31 சதவீதம் உயர்ந்துள்ளது. எனினும் உற்பத்தி பொருள்கள் விலை 4.81 சதவீதம் குறைந்துள்ளது. இது, டிசம்பர் மாதத்தில், முந்தைய ஆண்டின் இதே மாதத்தை விட 5.04 சதவீதம் உயர்ந்திருந்தது. 2012 டிசம்பர் மாதத்தில் 9.38 சதவீதம் உயர்ந்த எரிபொருள்கள் விலை, ஜனவரி மாதத்தில் 7.06 சதவீதம் அதிகரித்துள்ளது. பிப்ரவரி மாதத்திற்கான பொது பணவீக்கம் பற்றிய புள்ளிவிவரம் அடுத்த மாதம் வெளியிடப்பட உள்ளது. டீசல், பெட்ரோல் விலை அதிகரிக்கும் நிலையில் எரிபொருள் பணவீக்கம் பிப்ரவரி மாதத்தில் கடுமையாக அதிகரிக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

**மாண்டேக் சிங் அலுவாலியா**

திட்டக்குழுவின் துணை தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா பணவீக்கம் குறித்து கூறும்போது, ''இப்போதும் பணவீக்கம் ரிசர்வ் வங்கி எதிர்பார்க்கும் அளவிற்கு அதிகமாகவே உள்ளது. இது மேலும் குறைய வேண்டும்'' என்று தெரிவித்தார். பாரத ரிசர்வ் வங்கி, மார்ச் மாத இறுதியில் பணவீக்கம் 6.8 சதவீதமாக இருக்கும் என மதிப்பீடு செய்துள்ளது. எனினும் இது இவ்வங்கியின் இலக்கான 5–6 சதவீதத்தை காட்டிலும் அதிகமானது. இந்த நிலையில், உணவு தானியங்கள் கையிருப்பு மற்றும் சப்ளையில் உள்ள இடர்பாடுகள் களையப்பட வேண்டும் என இந்திய தொழிலக கூட்டமைப்பு (சி.ஐ.ஐ) தெரிவித்துள்ளது.

ஜனவரி 29–ந் தேதி வெளியிட்ட பணக்கொள்கை ஆய்வறிக்கையில் ரிசர்வ் வங்கி முக்கிய கடன் வட்டி விகிதங்களை 0.25 சதவீதமும், வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை 0.25 சதவீதமும் குறைத்தது. தற்போது பணவீக்கம் குறைந்துள்ளதால் இவ்வங்கி கடன் வட்டி விகிதங்களை மேலும் குறைக்க வாய்ப்புள்ளது. பொது பணவீக்கமும், அடிப்படை பணவீக்கமும் குறைந்துள்ள நிலையில் ரிசர்வ் வங்கி முக்கிய வட்டி விகிதங்களை 0.50 சதவீதம் குறைக்க போதுமான காரணம் உள்ளது என சி.ஐ.ஐ. தலைமை இயக்குனர் சந்திரஜித் பானர்ஜி கூறினார்.

**எதிர்கால வளர்ச்சி**

இனி ரிசர்வ் வங்கி தனது பணக்கொள்கையில் மேலும் தளர்வுபடுத்தும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஆனால் ரிசர்வ் வங்கியின் நிலைப்பாட்டை நிர்ணயம் செய்வது பணவீக்கம் மட்டுமே. அதே சமயம் இனிமேல் எதிர்கால பொருளாதார வளர்ச்சி கவனத்தில் கொள்ளப்படும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய புள்ளியியல் அமைப்பின் மதிப்பீடுகளின்படி, நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 5 சதவீதமாக குறையும் என தெரிகிறது. எனினும் மத்திய நிதி அமைச்சகம் 5.5 சதவீத வளர்ச்சியை என எதிர்பார்க்கிறது. சென்ற நிதி ஆண்டில் (2011–12) பொருளாதார வளர்ச்சி 6.2 சதவீதமாக இருந்தது.